முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1537

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.12.2023, வியாழக்கிழமை

1. தர்மஞான பலம்கொண்ட அரங்கா
தனிப்பெருங்கருணை மிகுந்த தேசிகா
வரம்பல பெற்று இந்த கலியுகத்தில்
வள்ளல் தன்மை பட உலகை ஞான லோகமாக மாற்ற இனிதே
2. இனிதே அற்புதம் நடத்துகின்ற
இணையில்லா கலியுகத்தின் மாதவராஜா
அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28 ம் நாள், 14.12.2023, வியாழக்கிழமை)
3. வரமென ஆறுமுகன் யான் உன்னோடு
வல்லமைபட இணைந்து சூட்சுமமாய் இருக்க
அறமென நீ செய்கின்ற அனைத்து சேவைகளும்
ஆறுமுகன் என் ஆசியோடு நடக்குதப்பா
4. அப்பனே உன் தொண்டர்படைகளெல்லாம்
ஆறுமுகன் என் ஞானப்படைகளாகும்
வரமென அவர்களெல்லாம் என் சூட்சும சக்தியோடு
வையகத்தில் மாதர்மம் புரிந்து வர
5. வருகவே வருங்காலம் அரங்கன் ஞானப்படைகளாலே
வையகம் அரங்கேற்றம் பெறும்
திறம்மிக்க அரங்கன் ஞானவான்களைக் கொண்டு
தேசமெங்கும் ஞான ஆட்சிதனை உருவாக்குவேன்
6. ஆகவே அரங்கன் வழி இன்னும் அளவிலா கூட்டம்
பெருகப்பெருக வரமாக உலகமெங்கும்
வள்ளல் தன்மை நிறைந்து
வடிவேலன் யான் ஞான ஆட்சித்தருவேன்

வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–